# P.L.RAJ IAS & IPS ACADEMY

**Building Bureaucrats Since 2006**

## August 26, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. பிரான்ஸ் தலைநகர் பாரீஸுக்கு அருகே சுமார் 600 கோடி யூரோவில் (இந்திய மதிப்பில் ரூ.66,814கோடி), உலகப்புகழ் பெற்ற ஜப்பானிய அனிமேஷன் தொடரின் கருப்பொருளில் பிரம்மாண்ட கேளிக்கை பூங்காவை அமைக்க பிரான்ஸ் மற்றும் சவூதி அரேபியா ஒப்பந்தமிட்டுள்ளது.
   i. சவூதி இளவரசர் முகமது பின் சல்மான் பிரான்ஸில் அரசுமுறைப் பயணம் மேற்கொண்டுள்ள நிலையில், பிரான்ஸ் அதிபர் மாளிகை இத்தகவலை அதிகாரபூர்வமாக அறிவித்தது.
   ii. பிரபல அனிமேஷன் தொடரான 'டிராகன் பால் ஸீ-ஐ மையமாகக் கொண்டு பாரீஸின் வட மேற்கே உள்ள செர்ஜி-பான்டோயிஸ் பகுதியில் அமையவுள்ள இந்தப் பூங்காவின் மூலம் சுமார் 22,000 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என பிரான்ஸ் அதிபர் மாளிகை தெரிவித்துள்ளது.

2. மேற்காசிய போரால் வளைகுடா நாடுகளில் இருந்து மேற்கொள்ளப்படும் விநியோகம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அமெரிக்காவிடம் இருந்து திரவமாக்கப்பட்ட பெட்ரோலிய எரிவாயு (எல்பிஜி) மற்றும் திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு (எல்என்ஜி) இறக்குமதியை இந்தியா கணிசமாக உயர்த்தியுள்ளது.
   i. அமெரிக்கா-ஈரான் இடையேயான தாக்குதல்கள் தொடர்வதால் வளைகுடா நாடுகளில் இருந்து ஹோர்முஸ் நீரிணை வழியாக சரக்குக் கப்பல்கள் பயணிப்பதில் சிக்கல்கள் நீடித்து வருகிறது.
   ii. இந்நிலையில், இந்தியாவின் எரிவாயு இறக்குமதி தொடர்பாக கெப்லர் நிறுவனம் வெளியிட்ட செய்திக் குறிப்பில், 'அமெரிக்காவிடம் இருந்து கடந்த ஜூலை மாதம் 8.9 லட்சம் டன், ஆகஸ்ட் மாதம் 6.2 லட்சம் டன் எல்பிஜியை இந்தியா இறக்குமதி செய்தது. இந்த இரு மாதங்களிலும் இந்தியாவுக்கு சவூதி அரேபியா எல்பிஜி விநியோகிக்கவில்லை. ஆகஸ்ட் மாதம் ஐக்கிய அரபு அமீரகத்திடமிருந்து 1.40 லட்சம் டன், கத்தாரிட மிருந்து 60,000 டன் எல்பிஜி இறக்குமதியை இந்தியா மேற்கொண்டுள்ளது.
   iii. கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் ஐக்கிய அரபு அமீரகத்திடம் இருந்து 8.91

லட்சம் டன் எல்பிஜியை இந்தியா இறக்குமதி செய்த நிலையில், இதற்கு நிகரான அளவில் நிகழாண்டு ஜூலை மாதம் அமெரிக்காவிட மிருந்து இந்தியா இறக்குமதி செய்துள்ளது.

iv. எல்என்ஜி இறக்குமதியும் அதிகரிப்பு:

- இந்தியாவுக்கு சராசரியாக ஒவ்வொரு மாதமும் 12 லட்சம் டன் எல்என்ஜி விநியோகிக்கும் கத்தாரிடமிருந்து நிகழாண்டு ஏப்ரல் மாதம் இறக்குமதி செய்யப்படவில்லை.
- மாறாக அமெரிக்காவிடமிருந்து நிகழாண்டு ஜூலையில் 7.5 லட்சம் டன் மற்றும் ஆகஸ்டில் 7.2 லட்சம் டன் எல்என்ஜி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

v. கச்சா எண்ணெய் - ரஷியா முதலிடம்:

- மேற்காசிய போரால் வளைகுடா நாடுகளைவிட அமெரிக்காவிடமிருந்து எல்பிஜி மற்றும் எல்என்ஜி இறக்குமதியை அதிகரிந்திருந்தாலும் இந்தியாவுக்கு அதிக அளவில் கச்சா எண்ணெய் விநியோகிக்கும் நாடுகளில் ரஷியாவே முதலிடத்தில் தொடர்கிறது.
- ரஷியாவிடமிருந்து ஒரு நாளைக்கு 20 லட்சம் பீப்பாய் கச்சா எண்ணெய்யை இந்தியா இறக்குமதி செய்கிறது. அடுத்தபடியாக ஐக்கிய அரபு அமீரகத்திடமிருந்து 6.1 லட்சம் டன் இறக்குமதி செய்யப்படுகிறது' எனத் தெரிவிக்கப்பட்டது.

3. இந்தியாவின் எண்மப் பரிவர்த்தனை பயணத்தின் பெரும் திருப்புமுனை யுபிஐ (யுனிஃபைடு பேமென்ட்ஸ் இன்டர்ஃபேஸ்) என்று பிரதமர் நரேந்திர மோடி புகழாரம் சூட்டினார்.

i. யுபிஐ சேவையின் பிரம்மாண்டமான வீச்சைக் கண்டு ஒவ்வொரு இந்தியரும் பெருமை கொள்ள வேண்டும் என்று அவர் தெரிவித்தார். யுபிஐ சேவை தொடங்கப்பட்டு 10 ஆண்டுகள் நிறைவையொட்டி, பிரதமர் இக்கருத்துகளைக் கூறியுள்ளார்.

ii. நாட்டின் எண்மப் பரிவர்த்தனை தளமான யுபிஐ, ரிசர்வ் வங்கியின் ஒழுங்குமுறை கண்காணிப் பின்கீழ் செயல்படும் இந்திய தேசிய பணப் பரிவர்த்தனை ஆணையத்தால் (என்பிசிஐ) கடந்த 2016, ஆக.25-ஆம் தேதி தொடங்கப்பட்டது.

4. உள்நாட்டு பாதுகாப்புத் தொழில் துறையினருக்கு பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பால் (டிஆர்டிஓ) உருவாக்கப்பட்ட வழக்கமான ஏவுகணைகள் சார்ந்த தொழில்நுட்பங்களை வழங்க பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் ஒப்புதல் வழங்கியுள்ளார்.

i. உள்நாட்டில் இத்தகைய ஏவுகணைகளின் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில், இந்த முக்கிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ii. இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில், 'பாதுகாப்புத் துறை கட்டமைப்பில் உள்நாட்டு தொழிற்சாலைகளின் அதிக பங்கேற்பை ஊக்குவிக்கும் முக்கிய திருப்புமுனை இந்த நடவடிக்கையாகும். அதி நவீன பாதுகாப்புத் தளவாடங்களின் மேம்பாடு, உற்பத்திக்காக இந்திய தொழில்துறையினரின் திறன்களை வலுப்படுத்த டிஆர்டிஓ மேற்கொண்டுவரும் தொடர் முயற்சிகளை பிரதிபலிக்கும் இந்த நடவடிக்கையின் கீழ் வழக்கமான ஏவுகணைகள் சார்ந்த தொழில்நுட்பங்கள் தகுதியுள்ள உள்நாட்டு பாதுகாப்புத் தொழில் துறையினருக்கு மாற்றப்பட்டு, ஏவுகணை உற்பத்தியை வெற்றிகரமாக மேற்கொள்ள வழிவகுக்கப்படும்.

iii. உள்நாட்டு உற்பத்தித் திறன்களை மேம்படுத்துவதுடன், பாதுகாப்புத் தொழில் அடித்தளத்தை வலுப்படுத்தி, விநியோகச் சங்கிலியில் குறு- சிறு- நடுத்தர தொழிலகங்கள் மற்றும் இதர தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு புதிய வாய்ப்புகளை உருவாக்குவதே நோக்கம்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

iv. அணுஆயுதம், உயிரி, ரசாயன ஆயுதங்கள் அல்லாத ஏவுகணைகளே வழக்கமான ஏவுகணைகள் எனப்படுகின்றன. மேற்கண்ட முன்னெடுப்பின்படி, ஆகாஷ், அஸ்திரா ஏவுகணைகள், நாக் பீரங்கி எதிர்ப்பு ஏவுகணை உள்ளிட்டவற்றை தனியார் நிறுவனங்கள் தயாரிக்க அனுமதிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

v. கடந்த 2014-இல் ரூ.46,000 கோடியாக இருந்த உள்நாட்டு பாதுகாப்பு உற்பத்தி மதிப்பு, 2025-26-இல் ரூ.1.78 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது. 2025-26-இல் பாதுகாப்பு தளவாடங்கள் ஏற்றுமதி ரூ.38,424 கோடியை எட்டியுள்ளது.

5. "ஒரே நாடு, ஒரே தேர்தல்" திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான மத்திய அரசின் திட்டங்கள் குறித்த பகுப்பாய்வு

i. முன்கூட்டிய கால அட்டவணை மற்றும் முன்மொழியப்பட்ட தொடக்கம்

- அரசியலமைப்புத் திருத்தங்கள் மற்றும் நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக, ஒருங்கிணைந்த தேர்தல் முறையை 2034-ஆம் ஆண்டிற்குள் மட்டுமே முழுமையாகச் செயல்படுத்த முடியும் என்று ஆரம்பத்தில் கணிக்கப்பட்டது.
- இத்திட்டத்தின் முதல் கட்டத்தை மிக முன்னதாகவே, குறிப்பாக 2029 மக்களவைத் தேர்தலுடன் இணைத்துத் தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகளை மத்திய அரசு தீவிரமாக ஆராய்ந்து வருகிறது.
- 2029-ஆம் ஆண்டிற்குள் நாடாளுமன்றத் தேர்தலையும், 22 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் சட்டமன்றத் தேர்தல்களையும் ஒருங்கிணைப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

ii. மாநிலங்களில் செயல்படுத்தும் உத்தி

- 2029-க்குள் ஒருங்கிணைப்பை அடைய, பல மாநில சட்டமன்றங்களை அவற்றின் அதிகாரப்பூர்வ ஐந்தாண்டு பதவிக்காலம் முடிவதற்கு முன்பே கலைப்பது குறித்து மத்திய அரசு பரிசீலித்து வருகிறது.
- இலக்கு வைக்கப்பட்ட 22 மாநிலங்களில், பாஜக 17 மாநிலங்களில் நேரடியாகவும், மற்ற 5 மாநிலங்களில் கூட்டணி மூலமாகவும் ஆட்சியில் உள்ளது. இத்தகைய வலுவான அரசியல் இருப்பு, முன்கூட்டியே தாமாக முன்வந்து சட்டமன்றங்களைக் கலைப்பதை மிகவும் சாத்தியமாக்குகிறது.
- அரசியலமைப்பின் 174(2)(b) பிரிவின் கீழ், மாநில முதலமைச்சர் மற்றும் அமைச்சரவையின் பரிந்துரையின் பேரில் சட்டமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் ஆளுநருக்கு உள்ளது; இது இம்மாற்றத்தை எளிதாக்குகிறது.

iii. சட்டமன்றப் பதவிக்காலம் முடிவடையும் விவரங்கள் - கட்ட வாரியான பகுப்பாய்வு

பல்வேறு மாநிலங்களுக்கான திட்டமிடப்பட்ட தேர்தல் ஆண்டுகளை இக்குறிப்பு விவரிக்கிறது; அத்துடன் 2029-க்குள் அனைத்தையும் ஒருங்கிணைக்கத் தேவைப்படும் கால அட்டவணை மாற்றங்களையும் இது விளக்குகிறது:

- 2027-இல் பதவிக்காலம் முடிவடைபவை (7 மாநிலங்கள்): கோவா, உத்தரகண்ட், பஞ்சாப், மணிப்பூர், உத்தரப் பிரதேசம், இமாச்சலப் பிரதேசம் மற்றும் குஜராத்.
- 2028-இல் பதவிக்காலம் முடிவடைபவை (9 மாநிலங்கள்): திரிபுரா, மேகாலயா, நாகாலாந்து, மிசோரம், சத்தீஸ்கர், மத்தியப் பிரதேசம், கர்நாடகா, ராஜஸ்தான் மற்றும் தெலுங்கானா.

- 2029-இல் பதவிக்காலம் முடிவடைபவை (8 மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்கள்): அருணாச்சலப் பிரதேசம், சிக்கிம், ஆந்திரப் பிரதேசம், ஒடிசா, ஜம்மு & காஷ்மீர், ஹரியானா, ஜார்க்கண்ட் மற்றும் மகாராஷ்டிரா.
- 2029-க்குப் பிறகு பதவிக்காலம் முடிவடைபவை (2030/2031-க்குத் திட்டமிடப்பட்டவை): டெல்லி மற்றும் பீகார் (2030-க்குத் திட்டமிடப்பட்டவை); தமிழ்நாடு, கேரளா, மேற்கு வங்கம், அசாம் மற்றும் புதுச்சேரி (2031-க்குத் திட்டமிடப்பட்டவை).

iv. ஆலோசனைகள் மற்றும் உயர்மட்டக் குழு

- கோவிந்த் குழு: முன்னாள் குடியரசுத் தலைவர் ராம் நாத் கோவிந்த் தலைமையிலான உயர்மட்டக் குழு, ஹரியானா, கர்நாடகா, குஜராத் மற்றும் கோவா உள்ளிட்ட பல மாநிலங்களில் ஏற்கனவே ஆலோசனைகளை நடத்தியுள்ளதுடன், பொதுமக்களின் மற்றும் அரசியல் கட்சிகளின் கருத்துகளையும் சேகரித்துள்ளது.
- அடுத்தகட்டமாக உத்தரப் பிரதேசத்தில் கருத்துகளைக் கேட்பதற்கான திட்டங்களை இக்குழு இறுதி செய்துள்ளது.
- நாடாளுமன்றக் கூட்டுக்குழு (JPC) டிசம்பர் 19 முதல் அரசியலமைப்புச் சட்டத் திருத்தங்கள் குறித்து ஆய்வு செய்து வருகிறது; நாடாளுமன்றத்தின் குளிர்காலக் கூட்டத்தொடரின் கடைசி வாரத்தில் தனது இறுதி அறிக்கையைச் சமர்ப்பிக்க இக்குழுவிற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

v. அரசியல் எதிர்ப்பு மற்றும் சட்டரீதியான விவாதம்

- "ஒரே நாடு, ஒரே தேர்தல்" (One Nation, One Election) மசோதா அடிப்படை அளவிலேயே அரசியலமைப்புக்கு முரணானது என்று எதிர்க்கட்சிகள் வாதிடுகின்றன.
- டெல்லியில் நடைபெற்ற நாடாளுமன்றக் கூட்டுக்குழுக் கூட்டத்தில், முன்னாள் மத்திய உள்துறை அமைச்சர் ப. சிதம்பரம், இம்மசோதா சட்டப்படி செல்லுபடியாகாது என்று வாதிட்டு தனது எதிர்ப்பை அதிகாரப்பூர்வமாகப் பதிவு செய்தார். திரிணாமுல் காங்கிரஸ் பிரதிநிதியும் (சாகரிகா கோஷ்) இதே கருத்தை வலியுறுத்தினார்.
- இந்த முக்கியமான அரசியலமைப்புச் சட்டத் திருத்தங்களை நிறைவேற்றத் தேவையான மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை நாடாளுமன்றத்தில் பெற, ஆளும் பாஜக தலைமையிலான கூட்டணி தீவிரமாகத் திட்டமிட்டு வருகிறது; இதற்காக திமுக உள்ளிட்ட பிற

கட்சிகளுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகிறது.

vi. வரலாற்றுப் பின்னணி

- ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவது என்பது இந்தியாவிற்கு முற்றிலும் புதிய ஒன்றல்ல. 1951-52 இல் நடைபெற்ற முதல் பொதுத் தேர்தல் முதல் 1967 வரை, மக்களவை மற்றும் அனைத்து மாநிலச் சட்டமன்றங்களுக்கான தேர்தல்கள் தொடர்ந்து நான்கு தேர்தல் சுழற்சிகளில் ஒரே நேரத்தில் நடத்தப்பட்டன.
- 1967-க்குப் பிறகு, பல மாநிலச் சட்டமன்றங்கள் தங்கள் ஐந்தாண்டு பதவிக்காலம் முடிவதற்கு முன்பே கலைக்கப்பட்டதால், இந்த ஒருங்கிணைந்த தேர்தல் சுழற்சி பாதிக்கப்பட்டது.